20th August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : An experimental study is being conducted at Vaniyambadi to evolve a suitable method for the proper and satisfactory disposal of tannery effluents. As soon as a suitable method is evolved, all the tanneries will be required to adopt it.

SRI S. M. ANNAMALAI : அந்த கிராமங்களில் உள்ளவர்கள் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள். கிணறுகள் தோண்டினாலும் கூட அதில் இருந்து வருகிற ஊற்று நீர் துர் நாற்றம் அடிக்கிறது. நான்கைந்து ஆண்டுகளாக இதுபற்றி சர்க்காருக்குப் பல மகஜர்கள் எழுதியும் கூடச் சர்க்கார் பேசாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்தப் பிரதேசத்தில் சுகாதாரவசதி பாதிக்கப்படாமல் இருப்பதற்கும், குடிநீரின் நாற்றத்தைப் போக்குவதற்கும் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம். இந்த பரிட்சார்த்தம் முடிவதற்கு முன்னே கூட அந்தமாதிரியான நீரை வெளியே மைதானத்தில் டாங்கு மாதிரி கட்டி நீராவியாக்குவதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

Solar energy

* 331 Q.—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விறகுக்குப் பதிலாக சூரிய வெப்ப மூலமாகக் கிடைக்கப்படும் உஷ்ணத்தை உபயோகிப்பதற்காக யந்திரங்களைத் தயாரிக்க திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(ஆ) Dose not arise.

SRI P. G. MANICKAM : சூரியனின் மூலமாகக் கிடைக்கும் வெப்பத்தைக்கொண்டு, வெளிநாடுகளில் பல்வேறு காரியங்கள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அதேமாதிரி நம் ராஜ்யத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது இல்லை யென்று சொன்னேன். இதைப் பரிசீலனை செய்யவேண்டு மென்றால் டெக்னிகல் நாலட்ஜ் வேண்டும். இப்போது அதற்கு வசதிகள் இல்லை.

Express Bus Service

* 332 Q.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether express buses have been introduced from Madras to Tiruchirappalli and Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

SRI T. S. RAMASWAMI : May I know, Sir, whether the Hon. Minister would be pleased to state the return they get in running the express buses on these routes?